NOOLAHAM FOUNDATION

**நூலக நிறுவனம்**

**மாதாந்த அறிக்கை- மே 2017**

**வணக்கம்**

நூலக நிறுவனத்தின் 2017 மே மாத ஆவணமாக்கல் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்சியடைகின்றோம்.

**எண்ணிம ஆவணவாக்கம் (Digital Preservation)**

| வகை | எண்ணிக்கை | பக்கங்கள் |
|---|---|---|
| எழுத்தாவணங்கள் | 581 | 26198 |
| பக்கம் தவறியவை | 9 | 1302 |
| தரமேம்படுத்தல் | 79 | 5906 |
| பக்கம் சிதைந்தவை | 1 | 28 |
| மொத்தம் | 694 | 34282 |

**எண்ணிம நூலகம் (Digital Library)**

- கொக்குவில் அலுவலக கிளையின் எண்ணிமமாக்கலில் இம்மாதம் 262 ஆவணங்கள் 17442 பக்கங்கள் ஆவணவாக்கப்பட்டுள்ளது.
- யாழ்ப்பாண பொது நூலக பத்திரிகை எண்ணிமமாக்கலில் இம்மாதம் 364 ஆவணங்கள் 7654 பக்கங்கள் ஆவணவாக்கப்பட்டுள்ளது.
- ஏழாலை களச்செயற்பாட்டில் இம்மாதம் 68 ஆவணங்கள் 9186 பக்கங்கள் ஆவணவாக்கப்பட்டுள்ளது.
- 24 ஆவணங்கள் 848 பக்கங்கள் ஏற்கனவே மின்வருடப்பட்ட பிரதிகளாக இனங்காணப்பட்டுள்ளது. இவை வெவ்வேறு சேகரிப்புக்களில் இருந்து பெறப்பட்டவை என்ற காரணத்தினால் மின்வருடப்படுகின்றது. ஆயினும் மேலுள்ள அட்டவணயில் இந்த எண்ணிக்கை சேர்க்கப்படவில்லை.
- 650 ஆவணங்களுக்கான பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.
- 244 ஆவணங்களுக்கான கட்டுரை இணைக்கப்பட்டுள்ளது.
- 136 தரமேம்படுத்தல் ஆவணங்களுக்கு கட்டுரை நிர்வாகத்தரவு இணைக்கப்பட்டுள்ளது.

**சேகர அபிவிருத்தி (Collections Development)**

- சேகர அபிவிருத்தியில் ஆசிரியர் மற்றும் பதிப்பாளர்களான சன்மார்க்கசபை, சி. என். எச். சாள்ஸ், க. பரணிதரன், செ. கணேசராஜா, ஆகியோரது சேகரிப்புக்களும் வெளியீடுகளும் ஆவணவாக்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் அவர்களில் சிலரது சேகரிப்புக்கள் ஆவணவாக்கப்படவுள்ளன. ஆவணங்களை பகிர்ந்து கொண்ட அனைவர்க்கும் எமது நன்றிகள்.

**ஆவணவாக்க அனுமதிகள் (Rights Management)**

- மே மாதத்தில் கீழ்வருவோர் தமது வெளியீடுகளை ஆவணவாக்குவதற்கான அனுமதியினை பதிவுசெய்துள்ளனர்.

வெளியீட்டாளர்கள்

★ ஒளி அரசி

எழுத்தாளர்கள்

★ ஜெயலா பார்த்தீபன்

**காப்புப்படி (Backup)**

- 34701-35000, 35501-35700 வரையான ஆவணங்கள் அனைத்தும் வன்தட்டுக்களில் காப்புப்படி எடுக்கப்பட்டுள்ளது. 35001-35500 வரையான இலக்கங்கள் கனடாவில் மின்வருடப்படுகின்ற ஆவணங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஆவணகம் வலைத்தளம் (aavanaham.org)**

- ஆவணகம் (aavanaham.org) வலைத்தளத்தில் கீழ்வரும் விடயங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

| வகை | எண்ணிக்கை |
|---|---|
| நூற்பட்டியல் | 3035 |
| ஒலிச்சேகரம் | 37 |
| படங்கள் சேகரம் | 296 |
| குறுங்கால ஆவணங்கள் | 57 |
| எழுத்தாவணங்கள் | 2 |
| ஆய்வுப் பொருட் சேகரங்கள் | 7 |

| | |
|---|---|
| ஓவியங்கள் சேகரம் | 2 |
| கையெழுத்து ஆவணங்கள் | 5 |
| தமிழ் நிகழ்த்துகைகள் | 15 |

**பயனர் சேவை (User Service)**

- எண்ணிம நூலக வலைத்தளத்தில் (www.noolaham.org) இம்மாதம் 19,987 பயனர்களால் 227,938 பக்கங்கள் பார்வையிடப்பட்டுள்ளன. இதனை 51.1% புது வாசகர்களும் 48.9% ஏற்கனவே உள்ள வாசகர்களும் பயன்படுத்தியுள்ளனர்.

- ஆவணக வலைத்தளத்தில் (aavanaham.org) இம்மாதம் 748பயனர்களால் 16,396 பக்கங்கள் பார்வையிடப்பட்டுள்ளன. இதனை 55.8% புது பயனாளர்களும் 44.2% ஏற்கனவே உள்ள பயனாளர்களும் பயன்படுத்தியுள்ளனர்.

**எழுத்துணரியாக்கம் (OCR)**

- இம்மாதம் 160 மின்னூல்களுக்கு உரிய எழுத்துணிரியாக்க(OCR) இணைப்புகளை எண்ணிம நூலக இணையப் பக்கத்தின், ஒவ்வொரு இணையநூல் பக்கத்திலும் உருவாக்கப்பட்டுள்ளன

**ஆளணி (Human Resource)**

- எண்ணிம ஆவணக உதவி அலுவலராக இம்மாதம் யாழ் அலுவலக கிளையிற்கு நாகசோதி விக்கினேஸ்வரன் இணைக்கப்பட்டுள்ளார்.

- நூலக நிறுவனம், ஊழியர்களுக்கான ஆறுமாத கால ஆங்கில மொழிக் கற்கை நெறி ஒன்றை 2016.10ம் மாதத்தன்று ஏற்பாடு செய்திருந்தது. இக் கற்கை நெறியானது இம் மாதத்துடன் நிறைவு பெற்றுள்ளது.

**நிர்வாகம் (Administration)**

- நிறுவனத்தின் முதன்மை முடிவெடுக்கும் அவையான Regulatory Board பதினொரு உறுப்பினர்கள் என்ற கொள்கையின் அடிப்படையில் இம்மாதம் மூன்று உறுப்பினர்கள் இணைந்துள்ளனர்.

**வழிகாட்டுநர் சபை (Regulatory Board)**

இம்மாதம் இரண்டு கூட்டங்கள் இடம்பெறுவதற்கு ஒழுங்கமைக்கப்பட்டன. இதனுடன் மே 27ம் திகதி சிறப்புக் கூட்டம் ஒன்றும் கூட்டப்பட்டது. அதற்கான இணைப்புக்கள்

- மே 07, 2017
  https://github.com/noolahamfoundation/governance/wiki/RB-Meeting-May-07,-2017
- மே 21, 2017
  https://github.com/noolahamfoundation/governance/wiki/RB-Meeting-May-21,-2017
- மே 27, 2017
  https://github.com/noolahamfoundation/governance/wiki/RB-Meeting-May-27,-2017-(Special-Meeting---Orientation)

**வரவு செலவு அறிக்கை (Financial Statement)**

- மே மாதத் தேவைகளுக்காக ரூ. 301,872.84 செலவானது. இதில் ஆளணியினருக்கான கொடுப்பனவுகள் ரூ. 223,275.00, வாடகை ரூ. 30,000.00, தொலைபேசி மற்றும் இணையம் 14,044.34 மின்சாரம் 7,843.50 மற்றும் ஏனைய செலவுகளும் உள்ளடங்குகின்றன.

- மே மாதம் ஐக்கிய இராச்சியம் அன்பர்கள் ஊடாக ரூ. 178,200.00 கேதீஸ்வரன் பொன்மைலநாதன் அன்பர் ஊடாக ரூ. 100,000.00 இலங்கை அன்பர்கள் ஊடாக ரூ. 15,000.00 ரூபாவும், மைத்ரேயி சபாரத்தினம் அன்பர் ஊடாக ரூ. 89,150.00 ரூபாவும் நன்கொடையாகக் கிடைக்கப்பெற்றது.

  இலாப நோக்கற்று இயங்கும் நூலக நிறுவனம் கொடையாளர்களின் நன்கொடையிலேயே இயங்கி வருகின்றது. அவ்வகையில் நன்கொடை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் எம் பணிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

  நன்றி